485

Regd. No. M. 1530

# BALAVINODINI

OR

## THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol IV] DECEMBER 1922 [No. 12

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Roypettah P. O., MADRAS.

Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

13 JAN 1

JC
9C 211, M'4
M22·4·12
186460

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருடசந்தா தபாற்கூலி யுட்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரு. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ரு 2 0 |
| தனி சஞ்சிகை .. | ... விலை | ரு. 0 2 6 |

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்தமாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச்சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில்சட்டியாவது பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம்.

4. வி. பி. யில் பெற்றுக்கோள்வதால் அணு மூன்று அதிகமாய் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தையறிவிக்கவேண்டும்.

7. சந்தா நேம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ... | ரூபா. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ... | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு ,, | ... | ,, | 3—0—0 |

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

[illegible]



தொண்டனூர்—[illegible]ண்டனும்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 003

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4 | 1922ஆம் டிசம்பர்மீ | பகுதி 12

### தொண்டனும் காளகண்டனும்.

ஒரு நாள் ஓர் இராஜகுமாரன், செடியும் கொடியும் முட்புதர்களும் அடர்ந்த ஒரு காட்டின்வழியே வடதிசையை நோக்கிச் சென்றான். அவன் கறுத்த நிறமுடையவனா யிருந்த போதிலும் மிக அழகாயிருந்தான். இவனுக்கு ஒப்பானவரும் உயர்வானவரும் இருக்கமாட்டார்கள் என்று கண்டவர் வியந்துபேசும்படி புஜபலமும் திடகாத்திரமும் கம்பீரப்பார்வையு முடையவனாயிருந்தான்.

ஸ்ரீ ராமாவதாரம் ஜனவரிமாதப் பத்திரிகையில் வரும்.

186460.

இவன் கையில் வில்லும் முதுகில் அம்பறுத்தூணியும் தாங்கி, இடையில் மரவுரி யுடுத்துச் சடைமுடி தரித்துக்கொண்டிருந்தமையால் முன் வனவாசஞ் செய்யத் தண்டகாரண்யம் சென்ற ஸ்ரீராமச்சந்திரனைப் போலவும் காணப்பட்டான்.

காட்டில் நிர்ப்பயமாய்ச் சென்றான். ஆகையினால் அவனை எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்த தீரனென்றுங் கருதவேண்டியிருந்தது. ஏதோ ஒரு பெரிய காரியத்தை முடிக்கப்போகிறவனாகவுந் தெரிந்தது. இப்படிச் சென்ற இராஜ குமாரன் ஓய்வில்லாமல் வெகுதூரம் வடக்கே காடு, மலை, வனாந்திரங்களைக் கடந்து சென்று பரதகண்டத்தின் வடதிசைக் கோடியிலுள்ள இமயமலைக்குப் போய்ச்சேர்ந்தான்.

அங்கே அநேக முனிவர்கள் தவஞ் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை யெல்லாம் இராஜகுமாரன் அன்போடு வணங்கினான். ஆதலின் அவன் பெரியவர்களிடத்திலே பக்தியுடையவனாகவும் காணப்பட்டான். அந்த மலையில் சாரணர்களும், யக்ஷர்களும் வித்தியாதரர்களும் இன்னும் பலவகையான தேவ வகுப்பினரும் வீற்றிருப்

---

பழமொழிகள்.

சில்லறைக் கடன் சீரழிக்கும்.

சிறுகக்கட்டிப் பெருகவாழ.

வரவுக்குத்தகுந்த செலவு செய்.

துடித்தனமோ துரைத்தனமோ.

நாம் செய்யவேண்டிய கடமைகளில் முக்கியமான கடமையேது?—சரீரத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள முயல்வதேயாம்.

எது வாழ்வு ? நோயற்ற வாழ்வே வாழ்வு.
எதை மறப்பது கூடாது? பிறர்செய்த நன்றியை.
எது ஒருவனை யுயர்த்துவது? ஒழுக்கம்.

எவர் மேற்குலத்தவர்? எவர் கீழ்க்குலத்தவர்? இட்டார் பெரியோர்; இடாதார் இழி குலத்தோர்.

பதையும், விலங்குகள் அங்கங்கு ஒன்றோடொன்று போரிட்டுக்கொண்டு கத்துவதையும் வேட்டமாடும் வேடர்களின் ஆரவாரத்தையும் விதவிதமான பறவைகள் விதவிதமாகக் கூவுவதையும் கேட்டான்; புதர்களில் காட்டுத் தீபற்றி யெரிகிற ஆரவாரத்தையும் கேட்டான்.

இவ்வாறு பார்த்துக்கொண்டே அம்மலைமீது ஏறிச் சென்ற அந்த இராஜகுமாரன், சர்வலோக சரண்யனுகிய சிவபெருமான் பார்வதிதேவியுடன் எழுந்தருளியிருக்கும் கைலாசகிரியைக் கண்டான். அதைக்கண்டதும் சிவபெருமானைத் தியானித்துத் துதித்து ஈசுவரனைத் தரிசிக்க வேண்டுமென்று அவாக்கொண்டான். அதனை அங்கே தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்களுணர்ந்து, "அப்பனே, நீ சிவபெருமானைத் தரிசிக்கவேண்டுமானுல் எம்மைப்போலிங்கிருந்து தவஞ் செய்தல் வேண்டும். இந்த மலையை நீ கண்ணுலே கண்டதே உன்பாக்கியம்" என்றனர்.

இராஜகுமாரன் உடனே தவஞ்செய்யச் சித்தமானுன். கைலாச கிரியில் தென்புறத்தில் தவச்சூழ லமைத்துக் கொண்டு விபூதி ருததிராக்ஷமணிந்து, ஒரு காலை நிலத்தில் ஊன்றி, அந்தக்காலின் தொடையின்மேல் மற்ருெரு

---

### கங்காநதி அழுவதேன்?

ஒருநாள் அக்பர்பாக்ஷா தன் மந்திரியுடன் கங்காநதிக்கரையில் உலாவிக்கொண்டிருந்தான். அப்பொழுது நதியில் புதுவெள்ளம் பெருகிப் பெருஞ்சத்தத்துடன் ஓடியது. அச்சத்தத்தைக் கேட்ட அக்பர் மந்திரியைப்பார்த்து, "இந்த நதியேன் அழுகிறது?" என்று கேட்டார். மந்திரி, "இந்த நதி தாயார்வீட்டிலிருந்து புருஷன்வீட்டுக்குப் போகிறதல்லவா?" என்ருன். இவ்வாறு சமயோசிதமாய்த் தக்கபதில் சொன்னதற்காக அக்பர் மந்திரியைப் புகழ்ந்துகொண்டார்.

காலை ஊன்றவைத்துக்கொண்டு சிவபெருமானைத் தவிர வேறு எதிலும் சிந்தையில்லாதவனாய்க் கைகளை மேலே உயர்த்திக்கொண்டு நின்று வேதாகம விதிப்படி தவஞ் செய்தான். அப்பொழுது அவனுடைய அந்தத் தவத்தைக்கண்ட அங்கிருந்த முனிவர்களெல்லாம் பிரமித்து, "இவன் யாரோ தெரியவில்லையே! அகோர தவம் செய்கிறானே" என்றெண்ணி வியப்புற்றார்கள். பிறகு அவன் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவம்புரிந்தான். அவன் சிவபெருமானுடைய திருவுருவத்தைத் தியானித்தபடியால், அவன் கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பம் பெருகியது. அடிக்கடி உடம்பு சிலிர்த்தது. அவன் குத்துக்கல்லைப்போல் ஒரேநிலையின் நின்றமையினால் அவனுடலிலே, வனவிலங்குகள் உராய்ந்து சென்றன. பாம்புகள் அதைக் கறையான் வந்தேறித் தங்குகிற புற்றென்றுகருதி அதன் மேல் ஊர்ந்தன. நாளடைவில் அவன்மீது கொடி செடிகளும் படர்ந்தன. அவன் வெயில், பனி, காற்று, மழை ஒன்றையும் இலட்சியம் செய்யாமல் தன்னை மறந்து ஈசுவரபரமாயிருந்து தவஞ்செய்தான்.

இவன் இங்கே இவ்வாறு தவஞ்செய்வதை அறிந்த தேவேந்திரன், சபைகூட்டித்தன் குருவாகிய பிரஹஸ்பதி பகவானைப்பார்த்து, "ஸ்வாமி, பூலோகத்தில் கைலாசகிரிச் சாரலில் இதுவரையில் எத்தனையோ பேர் தவஞ்

பணக்காரனானவன் பொருளைத் தானனுபவியாமலும் பிறருக்குக் கொடாமலுமிருப்பதனாலே பயனென்ன? பகைவனைக் கொல்லாதவனுக்கு பலமிருந்தென்ன பயன்? நித்தியகடனை நிலைதவறாமற் செய்யாதவன் நீதிசாஸ்திரங்களையும், வேதசாஸ்திரங்களையும் கரைகடந்து படித்தவனானாலும் பயனென்ன? ஐம்புலன்களை அடக்காதவன் இருந்தென்ன இறந்தென்ன?

செய்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட எவ்வள வோமடங் கதிகமான உக்ரதபசு இராஜகுமாரனொருவன் செய்கிறான். அவன் யாரென விசாரித்ததில், பாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுனன் என்று தெரியவந்தது ! அவன் தவத்தைப் பரிசோதிக்க விருப்பமுண்டாகிறது" என்றான். குரு, "அப்படியா, அருச்சுனன் நிகரற்ற வில்வீரனல்லவா ? பாண்டவர்களனைவரும் தம் மனைவியுடன் துரியோதனனால் துரத்தப்பட்டு வனவாசஞ் செய்ய வந்திருப்பதாகக் கூறக்கேட்டோம். ஏது இப்போது அருச்சுனன் மாத்திரம் தவம்புரிய வந்திருப்பது? காரணம் சிவபெருமானிடம் தங்கள் பகைவர்களாகிய துரியோதனாதியர்களை ஒழிக்கத்தக்க அரிய வரங்களையேனும் அஸ்திரங்களையேனும் பெறுவதற்காக இருக்குமென்று நினைக்கின்றேன்" என்றார்.

இந்திரன், "இருக்கலாம் ; அவன் மகாதீரன். அவனுடைய தவத்தை நான் பரிசோதித் தறிகிறேன்" என்று கூறி ஊர்வசி, அரம்பை முதலியவர்களை வரவழைத்து, "நீங்கள் பூலோகத்தில் கைலாசகிரிச் சாரலையடைந்து அங்குத் தவம்புரியும் அருச்சுனனுடைய தவ நிலையை அறிந்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

அந்தத் தேவமாதர்கள் உடனே இந்திரனை வணங்கி, "அப்படியே செய்துவருகிறோம்" என்று கூறி விடைகொண்டு புறப்பட்டுப் பூலோகத்திற்கு வந்தார்கள் ;

---

ஒரு சிறுகல்லை மலையின்மீதேற்றுவதானால் எவ்வளவோ ஆட்களும் சாமான்களினுதவியும் வேண்டும். ஆனால் அம்மலையினுச்சியிலிருந்து கல்லைத்தள்ளுவது மிக எளிது. அதுபோல் மனிதன் மேன்மையடையவேண்டுமானால் எவ்வளவோ கஷ்டப்படவேண்டும். தாழ்வடைவதில் அவ்வளவு சிரமமிருப்பதில்லை.

கைலாசமலையை யடைந்து அங்கே அகோரமான தவம் புரியும் அருச்சனனைக் கண்டு பிரமித்து நின்று அவன் தவத்தை வியந்தார்கள்; அப்பால் காற்சிலம்பும், மேகலையும், வளையல்களும் சப்திக்க விளையாடத் தொடங்கினார்கள்; சிலர் பந்தடித்தார்கள். சிலர் கழங்கு ஆடினர். சிலர் அம்மானை ஆடினர்; அப்பால் அங்கே கூவுகிற குயிலோடு எதிர் கூவினர்; அங்கே கொஞ்சிப் பேசுகிற கிளியோடு தாங்கள் கொஞ்சிப் பேசி அவைகளை அழைத்தனர்; நடித்தார்கள்; வீணை வாத்தியத்தைக் கொண்டு அதன் இசைக்கு ஒத்துப் பாடினார்கள். மலர்களைக் கொய்து அருச்சுனன்மீது எறிந்தார்கள்.

இவ்வாறு அவனுடைய தவத்தைக் கெடுத்தும் அவன் உறுதியாக நின்றான். அவன் மனத்தில், யமனை உதைத்த சிவபிரானுடைய திருவடியையும் யானைத் தோல் போர்த்த அந்த ஜகதீசனுடைய திருவுருவத்தையும் முக்கண்களையும் கங்கை தவழும் திருமுடிச் சடையையு மல்லாமல் வேறொன்றையும் கருதவில்லை. அதனால் அவனுடைய ஐம்புலன்களும் மனம்நின்ற வழியிலே நின்றன. ஆகவே, தேவமாதர்கள், "இவன் தவத்தை நம்மால் கலைத்தற்காகாது. இவன் சிவத்தியானத்தில் உறுதியாயிருக்கிறான்" என்றெண்ணித் தங்கள் முலகம் சென்று இந்திரனிடம் தாங்கள் செய்ததையும் அருச்சுனனுடைய தவவலிமையையும் கூறினார்கள்.

அப்பால் இந்திரன் தானே கிழவேதிய உருவங் கொண்டு அர்ச்சுனன் முன்வந்து, "அப்பனே, உன்னுடைய எண்ணமென்ன? நீ தவஞ்செய்கிற காரணம் யாது?" என்று கேட்டான். அருச்சுனன், இந்திரனை யாரோ

தவமுனிவரென்று கருதி, ஸ்வாமி, மங்கைபங்காளனைப் பிரத்தியக்ஷமாய்க் காணவெண்ணி இவ்வாறு தவஞ் செய்கிறேன். அந்த ஜகதீசனைக் காணும்வரையில் நான் தவத்திலிருந்து நீங்கேன்" என்றான். இந்திரன், வேதங்களுக்கும் தேவர்களுக்கும் எட்டாத ஒளியுருவமான சிவபெருமான் உன்னுடைய தவத்திற்குப் பிரத்தியக்ஷமாவனோ?" என்று கூறிச் சிரித்தான்; "இந்தத் தவத்தினால் உன் மெய் வருந்துமே யொழிய, நீ நினைத்தபடி பயனைத் தராது" என்றான். இதைக்கேட்டதும் அருச்சுனன், "சை, இவன் நம்முடைய உறுதியைக் கெடுக்க வந்திருக்கிறான்" என்றெண்ணி, என்னுடைய பிராணன் போகும் வரையில் நான் இந்தத் தவத்தைக் கைவிடுவதில்லை. பரம காருண்ய மூர்த்தியாகிய சிவபெருமான் என்னிடம் இரக்கங் கொள்கிறாரா இல்லையா என்று பார்க்கிறேன்" என்று கூறினான். இந்திரன் அதுகேட்டு மகிழ்ந்து தன் சுயரூபங்கொண்டு, "மைந்தனே உன் தவம் சிறந்தது. உன்னைச் சோதிக்கவே நான் முன் தேவமாதர்களை அனுப்பினேன். நீ உறுதியைக் கைவிடாதே! உனக்குச் சிவபெருமான் நீ விரும்பியபடி பிரத்தியக்ஷமாவர். அவரிடம் நீ விரும்பும் வரங்களைப் பெற்றுக்கொள்" என்று கூறிச் சென்றான். இந்திரன் இவ்வாறு வந்துபோனது அருச்சுனனுடைய உறுதியைப் பலப்படுத்தியது. ஆகவே அவன் தவத்தில் முனைந்து நின்றான்.

இவ்வாறிருக்கையில், அஸ்தினாபுரியில் அரசு செலு

---

அழையாதவீட்டுக்குச் செல்பவன் அசடன். ஒருவன் ஒன்றைக் கேளாமலிருக்கும்போதே வலியச்செய்பவன் வீணன் மன்னன் தன்னிடம் அன்புகொண்டவனென் றெண்ணுபவன் மண்டூகம்.

த்திவந்த துரியோதனனுகிய பாண்டவர்களின் பகைவன், அருச்சுனனுடைய இந்தத் தவசைக் கெடுத்து அவனை யுங்கொல்லக் கருதி மூகன் என்கிற ஓர் அசுரனை ஏவினுன். அவன் ஒரு பெரிய பன்றியுருக்கொண்டு இமயகிரிக்கு வந்து கைலாயமலைச் சாரலில் அருச்சுனனைத் தேடித் திரிந்துகொண்டிருந்தான். ஜகதீசன் எல்லோருடைய உள்ளத்திலுமிருந்து எல்லோருடைய எண்ணங்களையும் செய்கைகளையும் அறிபவரல்லவா? அவரை யாரால் ஏமாற்ற முடியும்? அன்றியும் அவர் தம்முடைய பக்தனுக்கு இடையூறுண்டாகும்படி பார்த்துக்கொண் டிருப்பாரா? பார்த்துக் கொண்டிருக்கமாட்டாரன்றோ? ஆகவே சிவ பெருமான் தம்முடைய பக்தனுகிய அருச்சுனனுக்குக் காட்சிதந்து அவனைக் காக்கத் திருவுளங்கொண்டனர்; உட னே தம்முடைய தேவியாராகிய பார்வதியம்மையாரிடம் ஆலோசித்துக்கொண்டு தாமொருவேடுவ உருவங்கொண் டார். யுமையார் வேடுவமாதாக உருவங்கொண்டார்கள். பிறகு சிவபெருமான் நந்திகேசுவரரை அழைத்து, அம் மை அன்ப, நாம் இப்பொழுது நமது பக்தன் அருச்சுன னுக்குத் தீங்கு செய்யத் துரியோதனனுடைய ஏவலால் பன்றியுருக்கொண்டு வந்திருக்கும் மூகாசுரனை வேட்டை யாடி வதைத்துப் பக்தனைக் காக்கத் திருவுளங்கொண்டு வேடுவராயிருக்கிறோம். நீயும் நம்முடைய கணத்தோடு வேடுவவடிவங்கொண்டு எமது பின்னே வருவாய்" என்று ஆக்ஞை யிட்டார். நந்திகேசுவரர் அவ்வாறே செய்ய

---

கொடையினு மொருநிதி குவலயத்திலை
உழுத்த குணத்திலும் உறுபகை வேறில்லை
நற்குணமதனினோர் நற்கல னில்லை
உற்சாக மதுபோல் உயர்பொரு ளில்லை.

ஒப்புக்கொண்டு சிவகணங்களோடு தாமும் வேடுவ உருவந் தாங்கிச் சிவபெருமானுடைய ஏவல்கேட்க ஆயத்தமானர்.

சிவபெருமான் தாம்கொண்ட உருவத்திற் கேற்ற படி, தமது அழகிய சடையைப் பின்னலுள்ள மயிராக மாற்றிக்கொண்டார்; மயிலிறகினுற் செய்த நீண்ட மாலையைத் தம் அழகிய நெற்றியிலே அணிந்து, கழுத் தில் பலகறைகளாலாகிய ஆபரணம் தரித்துக்கொண்டார்; மலர்களைத் தொடுத்துச் செவியில் குண்டலங்களாகக் கொண்டார்; புலித்தோலையும் இடையில் உடுத்தார்; திருவடியிலே தோற்செருப் பணிந்தார்; இடக்கையில் வில்லும் வலக்கையில் அம்பும் முதுகிலே அம்பருத் தூணியும் கொண்டார்.

பார்வதிதேவியார், தமதுமார்பில் குன்றிமணிகள் கோத்த ஆரமணிந்துகொண்டு, கைகளில் வளையல்களும் புலிப்பல் கோத்த ஆபரணமும் தரித்துக்கொண்டார்; நீலநிறமாகிய தம் திருமேனியில் மரத்தழைகளைப் பரப்பி யதனுலாகிய சேலையை உடுத்துக்கொண்டார். வேடச் சிகள் பலர் அம்மையாரோடு சூழ்ந்து நின்றனர். உமா தேவியார் தமது கரத்திலே சுப்பிரமணியக் கடவுளாகிய குழந்தையை எடுத்துக்கொண்டார்.

இவ்வாறு சிவபெருமானும் உமாதேவியாரும் அன் பனைக்காக்கப் புறப்பட்டார்கள். தேவதுந்துபி முழங்கி யது. எல்லோருக்குந் தலைவராகிய சிவபெருமானு

கெட்ட வாசனையை மூடிவைத்திருந்தபோதிலும் அது வெகு தூரத்தில் சென்று பாவுகின்றது. அதுபோல ஒருவனு டைய துஷ் கிருத்தியங்களை எவ்வளவு மறைத்துவைத்திருப் பினும் அவை எங்கும்சென்று பாவும்.

டைய கட்டளையினால் வேதங்களெல்லாம் நாய்களாகப் பக்கங்களிற் சுற்றிவந்தன. இப்பொழுது தேவர்களெல்லோரும் சிவபெருமான் தமது தொண்டரிடத்துக் காட்டு மன்பை வியந்து மகிழ்ந்து துதித்தார்கள்.

இவர்களிப்படி வருகையில், மூகாசுரனாகிய பன்றி அருச்சுனனை நெடுகலுந் தேடிக் கண்டுபிடித்து எதிர்த்தது. அப்பொழுது அருச்சுனன் இது நமது தவத்தைக் கெடுக்குமென்றஞ்சிக் காண்டீவமென்னும் தன்னுடைய வில்லையெடுத்துவளைத்து மிகுந்த கோபத்துடன் அதன்மேலேபாய்ந் துருவும்படி அம்பெய்தான். இதற்குச் சற்றுமுன்பே பரமசிவன் தம் பரிவாரத்தோடு அந்தத் தவச்சூழல் வந்துசேர்ந்தாரா கையினால் அவர், அருச்சுனன் அந்தப் பன்றியை எய்தபோது தாமும்தமது வில்லில் அம்பைத்தொடுத்து எய்தார். இருவருடைய அம்பும் ஏககாலத்தில் பன்றியின்மேலே பாய்ந்தது. அதனால் பன்றி அலறிக்கொண்டு விழுந்து இறந்தது.

இப்பொழுது சிவபெருமானுடைய பரிவாரங்களாகிய வேடர்கள், அருச்சுனனை நெருங்கி, “அடே ஒருவன் குறிவைத்து அடித்த குறியை நீ அம்பெய்து துளைத்தது ஒரு வல்லமையோ?” என்று கேட்டு அதட்டினார்கள். இத்தருணம் சிவபெருமானும் அருச்சுனனை நெருங்கினார். ஈசனை வேடர் தலைவனென்றறிந்த அருச்சுனன்

---

தவளைகள் தாமரைப் புஷ்பத்தின் சமீபத்திலிருந்தாலும் அதில் ஒழுகும் தேனையுண்ண அறிகிறதில்லை. எங்கேயோவுள்ள வண்டுவந்து அதை அருந்துகின்றது. அதுபோல, எத்தனை சமீபத்திலிருந்தாலும் மூடர்கள் ஞானிகளிடத்தில் அறியவேண்டியவைகளை அறிகின்றிலர். விவேகிகளோ வெகு தூரத்திலிருந்தபோதிலும் ஞானிகளை அடுத்து ஞானமிர்தத்தைக் கிரகிக்கின்றார்கள்.

அவரைநோக்கி, "முன்னே, பிரயோகித்த என் அம்பு பன்றியின் முகத்தைப்பிளந்து பின்னே முதுகுவழியாய்த் துளைத்துச்சென்றது. நீ விட்ட அம்பு பின்பக்கமிருந்து தலையிலே துளையுண்டாகும்படி பாய்ந்தது. நடந்த திவ்வண்ணமிருக்க என்பேரில் நீங்கள் குறை கூறுவது எதனால்? உங்களுக்கு வல்லமை யுண்டென்கிற செருக்கினலா?" என்று கேட்டு, "எனக்கு இப்பன்றி வேண்டுவதில்லை. நான் காய்கறி புசிப்பவனுயிருக்கிறேன். நீ கொண்டுபோனல் உனக்கும் உன் சேனைக்கும் நல்ல உணவாகும். அப்படிச் செய்யாமல் வீண் வாதம் செய்வீர்களானல் என்னுடைய வில்லுக்கு இரையாவீர்கள்" என்ருன்.

சிவவேடன், "நீ ஜீவகாருண்ய மில்லாதவன். உன் செயலென்ன? நீ செய்த செய்கையென்ன? தவவேடத்தைக் கொண்டு கொடுமையான இந்தச் செய்கை செய்யலாமா? பசுவின் தோலைப் போர்த்துக்கொண்ட புலிபோலுள்ள நீயார்? பிராமணனு, அரசனு, அல்லது வைசியனு, துஷ்ட இராக்கதர்களிலே சேர்ந்தவனு? நீயார்?" என்று கேட்டார்.

அருச்சுனன் தன் வரலாறு கூறினன். கேட்டதும் சிவவேடன், 'ஓ நீதானு பாண்டவர்களிலே வில்வீரனுக விளங்குபவன்? உன்னைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எங்கள் குலத்தில் தோன்றிய ஏகலவ்யனென்னும் ஒரு வேடனை அவனுடைய வில்லின் திறமை பார்த்துப் பொருமைகொண்டு அவன் விரலொன்றை வாங்கினய்? இவையன்றி, பசிநோயால் வருந்திவந்த அக்கினி பகவானுக்குக் காண்டவமென்னும் காடுமுழுவதும் கொடு-

த்தபொழுது, ஓர் உயிரைப்போலவே அசுரர், மிருகம், பறவைகள் முதலிய பலவகையான ஜீவர்களை யெல்லாங் கொன்று அவ்வனத்தில் மலைகள்தோறு மிருந்துவந்த வேடர்களையெல்லாம் வெந்து சாம்பலாகும்படி செய்த வன் நீதானே? இப்படிப் பல சமயங்களிலும் நீ வேடர் களுக்குத் தீங்கு செய்திருப்பது மல்லாமல் என்னையும் இப்பொழுது இகழ்ந்து பேசினாய்! இல்லையா? உனக்கு நான் அஞ்சினவனா? இப்பொழுது நீயும் நானும் தோள் வல்லமையையும் வில்லின் வல்லமையையும் நேராகக் காண் போம். என்ன சொல்லுகின்றாய்?" என்று கேட்டார்!

கேட்டமாத்திரத்தில் அருச்சுனன், "பார்ப்போம்" என்று கூறி வில்லில் பாணத்தைத் தொடுத்து எய்தான். சிவவேடன் அதை ஓரம்பினாலே தடுத்து அருச்சுனன் மேல் இரண்டு பாணங்களை யெய்தார். அருச்சுனன் கோபங் கொண்டு மீண்டும் பாணங்களை யெய்தான். அது சிவ வேடனுடைய முடியிலே பட்டது. இப்படியாக அம் பெய்து இருவரும் சிறிதுநேரம் வரையில் யுத்தஞ் செய் தனர். பிறகு அருச்சுனன் களைத்துப்போய் ஒரு மரத்தின்மீது சாய்ந்துவிட்டான். அதைப் பார்த்த பார்வதிதேவி தன் நாயகனைப்பார்த்து, "அன்பன் விழுந்து விட்டான். போதும் விளையாட்டு" எனவே, சிவவே டன், இரக்கங்கொண்டு அவனுடைய களைப்பு நீங்கும்படி

---

மழைத்துளியானது பழுக்கக்காய்ச்சின இரும்பில் விழுந் தால் காணமற்போகின்றது. தாமரையிலையில் விழுந்தால் முத் துப்போலாகின்றது; சமுத்திரத்துள்ள சிப்பியில் விழுந்தால் முத்தேயாய் விடுகின்றது. அதுபோல, குருவினால் அனுக்கி ரிக்கப்பட்ட ஞானோபதேசமானது கிரகிப்பவர்களுடைய பக்கு வத்துக்குத் தக்கபடி விளங்குகின்றது.

செய்தார். அருச்சுனன் களைப்புநீங்கி மறுபடியும் காண்டீபத்தையேந்திக்கொண்டு யுத்தத்திற்குவந்தான். சிவவேடன், உடனே, ஓர் அம்பெய்து அந்தக் காண்டீவத்தின் நாண் அறும்படி செய்தார்.

அருச்சுனன் உடனே தன்வில்லின் தண்டையெடுத்துக்கொண்டு சிவவேடனிடம் ஓடி அவனுடைய மண்டையில் அதனால் அடித்தான். சிவவேடன், சகல உயிர்களுக்கும் உயிராயும் ஸர்வாந்தர்யாமியாயும் உலகத்திலுள்ள சராசரங்களாயும் விளங்குகிறவனாதலால் அவன் மீதுபட்ட அந்த அடி உலகத்திலுள்ளவர்களெல்லோருடைய தலையிலும் பட்டது; பாதாளத்திலுள்ளவர் மீதும் பட்டது; தேவலோகத்திலுள்ளவர்கள் மீதும்பட்டது.

பிறகு சிவவேடன் அருச்சுனனுடன் மல்யுத்தம் தொடங்கினான். அருச்சுனனும் வீராவேசத்துடன் தொடை தட்டிக்கொண்டு எதிர்த்துமலைந்தான். சிவவேடன் இடையில் கோபங்கொண்டு தன் திருவடியால் அருச்சுனனை உதைத்துத் தள்ளினான். அருச்சுனன் தேவலோகம் வரையிலே போய்ப் பூமியிலேவிழ விருக்கையில் தன் முதுகு காட்டாமலே வந்து சிவவேடன் முன்குதித்து மீண்டும் யுத்தத்திற்கு முயன்று நின்றான். அருச்சுனனுடைய இந்தச் சாமர்த்தியத்தைக் கண்ட சிவவேடன் மகிழ்ந்து மனமுருகி, பரிசுத்தமான ரிஷபத்தின் மேல் தேவியாருடன் அன்பனுக்குத் தரிசனந்தந்தார். இந்தத் திவ்யதரிசனங்கண்ட அருச்சுனன், அளவிறந்த மகிழ்ச்சியடைந்து வெட்டுண்ட மரம்போல் கீழேவிழுந்து பலமுறை பணிந்தெழுந்து இருகைகளையும் சிரசின்மீது கூப்பிநின்று துதித்துப் பரவசமாய் ஆநந்தக் கூத்தாடினான். ஓடினான். குதித்தான்—

'நாயினும் கடைப்பட்ட அடியேனுக்கு இந்தப்படி திவ்யதரிசனந்தந்த இச்செயலை நானென்னவென்றுசொல்வேன். ஜகதீசனே பரமகருணாநிதியே, பார்வதிநாதனே, பரஞ்சோதியே, காளகண்டனே,-இன்றுதான் ஜீவகாருண்ய சீலராகிய தருமபுத்திரருக்கு நான் தம்பியானேன். கண்ணபிரானுக்கு நண்பனானேன்'' என்று புகழ்ந்து துதித்தான்.

சிவபெருமான் சந்தோஷமடைந்து அவனை வாழ்த்தி, அவன் களைப்பைத் தீர்த்தார். அவனுடைய தவத்திற்குத் தாம் சந்தோஷமடைந்ததாகவும், அதன் பேரில் வேடுவ வேடங்கொண்டுவந்து விளையாடியதாகவும் கூறி அவன் தம்மை அடித்ததனால் கொண்டிருக்கும் அச்சத்தை நீக்கி, "உனக்கு வேண்டியவரம் யாது?'' என்று கேட்டார்.

அருச்சுனன் "ஸ்வாமி அடியேன் அறியாமற் செய்த பிழைகளைப் பொறுத்தருளவேண்டும். பாரதயுத்தம் நேரிட்டுப் பகைவர் எதிர்க்குங் காலத்தில் அவர்களைச் சிதறவடிக்கவல்ல பாசுபதாஸ்திரம் தந்தருளவேண்டும்'' என்று கேட்டான்.

சிவபெருமான் உடனே கருணை கூர்ந்து, "அருச்சுனா, உனக்கு எல்லா மங்களங்களு முண்டாகும். பொறுத்தோம் எல்லாவற்றையும்'' என்று கூறிப் பாசுபதாஸ்திரங் கொடுத்து அதற்குரிய மந்திரத்தையும் உபதேசித்தருளி மறைந்து தமது பரிவாரங்களோடும் தேவியோடும் கைலாயத்துக் கெழுந்தருளினார்.

இவ்வாறு சிவபெருமான் மறைந்தவுடன், இந்திரன் விமானத்தோடு அங்கேவந்து அருச்சுனனை அந்த இரத்ததிலேற்றி வைத்துக்கொண்டு தன் உலகத்துக்கு

அழைத்துக்கொண்டுபோய் அமுதமுண்பித்து அவனைத் தன் சிம்மாஸனத்தில் வீற்றிருக்கச் செய்து கிரீடஞ் சூட்டி அவனுக்குப் பல அஸ்திரங்களை மந்திரங்களுடன் கொடுத்து உபசரித்தான்.

அப்பால் அருச்சுனன் தேவேந்திரனிடம் விடை கொண்டு தேவலோகத்திலிருந்து புறப்பட்டுப் பூலோகத்தில் தருமபுத்திரரிருக்கும் வனத்திற்குவந்து அவரையும் வீமனையும் வணங்கித் தன் தம்பியர்களை ஆசிர்வதித்தான். தருமபுத்திரர் முதலிய யாவரும் தங்கள் பகைவர்களைக் களைந்துவிட்டதாக எண்ணிப் பரமாநந்த மடைந்து சிவபெருமானைத் தியானித்து வணங்கித் துதித்தார்கள்.

---

## கடமைநெறி

பிரிட்டனி என்னும் இடத்திலிருந்து வெகுதூரத்தில் மனித வாசமல்லாத கொர்டோனிஸ் என்னும் இடத்தில் ஒரு தீபஸ்தம்ப மிருக்கிறது. அதில் விளக்குப்போடுவதற்கு ஒரு மனிதனுண்டு. அவனுக்கு 4 குழந்தைகள் உண்டு. அவன் ஒரு நாள் சுகவீனனாய்ப் படுக்கையிற் கிடந்தான். அவன் மனைவி, அவனுக்குப்பதில், தீபத்தைப் பொருத்தப் போனாள். அதற்குள் அவன் இறந்துவிட்டான். அவள் வந்து பார்த்து விசனப்படும்போது ஒரு பையன், "மேலே சுழலவேண்டிய விளக்குச் சுழலவில்லை"யென்றான். இவள் தன்னாலானமட்டும் பார்த்து முடியாமல் தன் பிள்ளைகளில் இருவரை, உச்சிக்குக் கொண்டுபோய் அவ்விளக்கின் இயந்திரத்தைச் சுற்றும்படி செய்துவிட்டு, தானும் மற்ற இரண்டுபிள்ளைகளும், இறந்தவனருகே யிருந்தார்கள். உச்சியில் இரண்டு பையன்களும் விடியும் வரையில் இயந்திரத்தைச் சுழற்றிக்கொண்டே யிருந்தார்கள் கப்பலுக்கு அபாயம் வந்துவிடுவதைத் தடுப்பதற்கு ஏற்பட்டிருக்கும் இவ்விதமான தீபஸ்தம்பங்களில், இயந்திரம் சுழலாவிட்டால், கப்பல்கள் வழிதப்பிப் பாறைகளில் மோதிக் கொள்ளும். புருஷன் இறந்தும் வேலையில் ஜாக்கிரதையாக அவள் இருந்து செய்தது, எவ்வளவு கொண்டாடத் தகுந்தது பார்த்தீர்களா!

## ஹாஸ்யம்

### முடியழகி மொட்டையழகியானது

அம்பட்ட ஐயாக்கண்ணு:—அம்மா! தங்கள் பிள்ளை க்ஷவரம் செய்துகொண்டதற்கு இரண்டணு கொடுக்கவேண்டும். செலவுக்கில்லை கொடுங்கள்.

முடியழகி:—அடே! கையில் கால்ரூபாய்தான் இருக்கிறது. இந்தா இரண்டணு எடுத்துக்கொண்டு மீதி இரண்டணு வைக் கொடுத்துவிடு. எனக்கும் செலவுக்குத் தேவை.

ஐயாக்கண்ணு:—அம்மா, என்னிடத்தில் சில்லறையில்லை. நீங்களே மாற்றி எனக்குச் சேரவேண்டியதைக் கொடுங்கள்.

முடியழகி:—நான் எங்கடாபோவேன் இப்போது. கால் ரூபாயையும் நீயே எடுத்துக்கொண்டு அதிகமாயுள்ள இரண்டணுவுக்கு எனக்கு க்ஷவரம் செய்துவிடு.

ஐயாக்கண்ணு:—ஆஹா அப்படியேசெய்கிறேன் உட்காருங்கள்.

முடியழகி:—சீக்கிரம் செய். வேலையதிகமாயிருக்கிறது.

ஐயா:—அம்மா சிரைத்துவிட்டேன். போய்வருகிறேன்.

முடியழகி:—(புருஷன் வந்ததும்) என்னுங்கோ நீங்கள் கால்ரூபாய் பத்தாய்க் கொடுத்துவிட்டுப் போனீர்கள். பையன் க்ஷவரம் செய்துகொண்டான். அதற்கு இரண்டணு தேவையாயிருந்தது. அம்பட்டனிடமும் சில்லறையில்லை. அதனுல் அவன் கொடுக்கவேண்டிய இரண்டணுவுக்கு நானும் க்ஷவரம் செய்துகொண்டேன். பணத்தையேன் அவனிடம் விடவேண்டும். இப்பொழுது பாருங்கள் எப்படியிருக்கிறது. அழகாயில்லையா!

புருஷன்:—பேஷ். வெகு அழகாயிருக்கிறது. அத்தோடு எண்ணெய்மீந்தது, சீப்புமீந்தது, கட்டுக்கயிறுமீந்தது, பூ மீந்தது, புகைமீந்தது, ஈர்கொல்லிமீந்தது, ஈரையும் பேனையும் சம்ரக்ஷிக்கும்படியான சம்ரக்ஷணைமீந்தது, மயிர்பிடி சண்டையும் மீந்துவிட்டது. எவ்வளவோலாபம். நல்லவேலைசெய்தாய். நீதான் புத்திசாலி! பழனி திருப்பதி முதலிய ஆலயங்களுக்கும் போகவேண்டிய செலவும் மீந்தது.

முடியழகி:—நாதா! இப்போது என்னை எல்லோரும் என்னவென்று அழைப்பார்கள்?

புருஷன்:—முடியழகி மொட்டையழகியானுள் என்று அழைப்பார்கள்.

மொட்டையழகி:—சந்தோஷம்! சந்தோஷம்!

## அகங்காரம்.

(352-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்த உத்தரவைப் பெற்ற கருடபகவான் திருப்தியில்லாத உள்ளத்துடன் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைப் பார்த்து,

ஐய! நீர் அடியேன் ஆண்மை அநுபவத் தறிந்தும் அந்த
மெய்யதாம் மேன்மைக்கீனம் மேவ இப்பணியை யிட்டீர்;
நொய்ய வானரத்தை யிங்கு நொடியினிற் கொணரச்சிற்றுள்
வையகத்திலேயோ வேறு; வாய்மையா யுரைசெய்வீரே

என்று சொல்லிப் பின்னும் அவரைப் பணிந்து, "சுவாமி! நான் போவதற்குச் சிறிதும் அஞ்சவில்லை. புலிபசித்தாலும் புல்லைத்தின்னு தென்பார்கள். அதுபோல என் தேகம் என்னதான் தினவு கொண்டாலும் அத்தினவைத் தீர்த்துக்கொள்ள ஓரற்பக் குரங்கை நான் எதிர்ப்பது சரியன்று. நரியானது எத்துணைத் தீங்கு செய்தாலும் மிருகராஜனுகிய சிங்கம் அதை அதற்கீடான வேறொரு பிராணியைக்கொண்டு தண்டிக்குமே யொழிய நேரே எதிர்ப்பதுண்டோ? அவ்வாறு யான் வேறெவரைக்கொண்டாவது அந்த மார்க்கடத்தை இங்கு வரவழைக்கிறேன். கிருபை பண்ணவேண்டும்" என்று கெஞ்சிக்கேட்டுக் கொண்டனன்.

பகவான் இவ்வசனத்தைக் கேட்டுச் சிறு நகை

செய்து "கருடாழ்வானே! நீ சொல்வது யதார்த்தந் தான்; ஆனால் அது எனக்கு அகௌரவத்தை யுண்டு பண்ணும்; ஆகையால்,

என்னைக் கனப்படுத்த என்னுடன்நீ எக்காலும்
மன்னி யிருத்தலினால் மற்றந்த—உன்னதந்தான்
நன்றுவெளி யாக நயந்துன்னை யேவினேன்
சென்றுவரு வாய்நீ சிறிது—என்றார்.

உடனே கருடாழ்வான், பூமியிற் குனிந்து ஆகா யத்திற் கிளம்பும் சிங்கத்தைப்போல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து நந்தவனத்தைக் கிட்டினன். அங்கு ஆஞ்ச நேயர் அச்சமயம் மிக்க அமைதியோடு எழுந்தருளி யிருந்தார். பறவை வேந்தன் அவரைப் பார்த்து மகா கோபாவேசத்துடன்,

ஆரடா குரங்கே இந்த அழகிய வனத்தில் வந்து
நேரடாக் காரியத்தை நிகழத்தினாய்; சீக்கிரத்தில்
பாரடா வந்த மார்க்கம் பணிவுடன்; இல்லையாயின்
போரடா செய்வதானால் புறப்படு புறப்படென்றான்.

இந்தக் கொடூரமொழி வாயுபுத்திரரான மாருதிக்கு மகத்தான குரோதத்தை எழுப்பிவிட்டது. அவர் வயின தேயனைப் பார்த்து "மூர்க்கா! நீ முன்பின் பாராமலும், என்னை இன்னானென்றறிந்து கொள்ளாமலும், எடுத்த எடுப்பிலேயே என்னை இகழ்ந்து பேசத்துணிந்து விட்டாயே. இப்படித் துணிவது சுத்தவீரர்களுக் கழகாமா?

* "பகை யென்னும் பண்பிலதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று" (குறள்)

* பகையென்று சொல்லப்படும் பண்பு இல்லாத ஒன்றை அதாவது தீமையை உண்டுபண்ணுவதை-ஒருவன் விளையாட்டாக வாயினும் கொள்ளுதல் தகுதியானதல்லவென்று நீதி நூல்கள் கூறும். 'விளையாட்டாய் நடந்தது வினையாய் முடிந்தது' என்பது பழமொழி.

என்னும் நீதியை நீ படித்தறியாய் போலும்.

†"புயத்துறை வலியரேனும் பொறையொடும் பொருந்திவாழ்தல்
சயத்துறை அறனும் அஃதே"

என்று பெரியோர் போதித்து வருகின்றனரே. நல்லது உன் பராக்கிரமத்தை இதோ பார்க்கிறேன்" என்று கருடாழ்வான்மீது பாய்ந்தார்.

பத்தரைமாற்றுப் பசும்பொன்னையும் பழிக்கத்தக்க அழகுவாய்ந்த திருமேனியையும், பட்டப்பகற்போல நிலவைவீசும் வட்டமதியும் வணங்கத்தக்க கண்டத்தையும் உடைய வேதசொரூபியான கருடபகவானுக்கும், உதய காலத்தில் செக்கச்செவேலென்று உதித்த இளஞ்சூரியனைக் கனிந்த பழமென்றெண்ணிக் குழந்தைப் பருவத்தில், பசிதாளாது பாய்ந்து பிடித்த பலம்வாய்ந்த ஞான சொரூபியான வானரவீரனுக்கும் மெய்யோடு மெய்கலக்கும் பெரிய யுத்தம் கைகலந்தது. நெடுநேரம் தோற்பு கெலிப்பு விளங்காதபடி இருவரும் போரிட்டனர். கடைசியில் ஆஞ்சநேயரின் கைப்பிடியினின்றும் கருடபகவான் மீறக்கூடாமல் "இதென்ன குரங்குப்பிடியா யிருக்கிறதே" என்று பிரமிக்கலாயினன்; இப் பிடியினின்றும் தப்பினாற் போதுமென்று தவித்தனன்; எனக்கு மிஞ்சிய பலசாலி எவருமில்லை யென்றிறுமாந்திருந்த செருக்கு இன்றோடென்னை விட்டொழிந்தது என்றுணர்வுபூண்டனன்; "ஐயா! ஆஞ்சநேயரே! எனது அகங்காரம் தீயிலிட்ட பஞ்சாய் நீங்கிவிட்டபடியால் என் பிழையை மன்னித்து என்னைக் காப்பாற்றும்" என்று வேண்டிக்கொண்டனன்.

---

† புயத்து உறைவலி-புஜபலம். பொறை-சமாதானம். சயத்துறை-வெற்றியைத் தரும் மார்க்கம்.

மாருதி மனமிரங்கிக் கருடாழ்வானை விடுத்து ஓடிப்போ வென்றுரைத்தார். கருடனும் அதே ஓட்டமா யோடிவந்து கிருஷ்ணமூர்த்தியின் திருவடியில் விழுந்து நடந்த வரலாற்றை நடுக்கத்துடன் சொல்லி "சுவாமி! உலகத்தில் வல்லானுக்கு வல்லான் வாழ்வுற்றிருப்பதை நேரிற் கண்டேன். அஞ்ஞானத்தால் ஆழமறியாமற் காலிட்டுக் கொண்டேன். ஆண்டவனே! இப்படியும் என்மதி இருக்கவேண்டுமா? ஐயோ! மண்டைக்குத் தகுந்த கொண்டை யல்லவோ போடவேண்டும். வீணாய் மதயானைக்குப் போனது மார்க்கம் என்பதுபோல மமதை கொண்டு நடந்து மானமிழந்தேனே" என்றனன்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவ்வசனங்களைக் கவனித்துத் தமக்குள் புன்னகை புரிந்து "அப்படியா ஆயிற்று உன்கதி? அப்பா! கருடா! ஈரநாவிற்கு எலும்பில்லை என்கிறபடி நீ ஏதேதோ உன்னைப்பற்றிச் சிலாகித்துப் பேசினதால் அப்படிப்பட்ட வீரனை அனுப்புவதுதான் என் பெருமைக்கு யோக்கியதை யென்று உன்னை யனுப்

---

## கொல்லாமை.

கொல்லாதான் தன்மந்தன் மேற் கூறின் மற்றில்லை தர்மம்
கொல்லாதான் செல்வந்தன் மேற் குவலயத்தில்லை செல்வம்
கொல்லாதான் துறவு தன்மேற் கொள்ளலாந் துறவுமில்லை
கொல்லாதான் ஞானந் தன்மேற் கூர்ந்தமெய் ஞானமில்லை.

தன்மம்=தருமம்; குவலயம்=பூமி; துறவு=உலகத்தில் எல்லா ஆசையும் விட்டொழித்தல்.

"அறவினை யாதெனிற் கொல்லாமை, கோறல்
பிறவினை யெல்லாந் தரும்"—தமிழ்வேதம்.

தருமமாகிய செய்கை யாதென்று கேட்டால், அது ஒருவரையும் கொல்லாமையாம். அவற்றைக்கொல்லுதல் பாவச் செய்கைக ளெல்லாவற்றையுந்தானே தரும்.

பினேன். ஆனால் பிள்ளைபெற்ற பின்பே பேரிடவேண்டும் என்பதை இப்போது நாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துகொண்டோம். ஆகிலும் பாதகமில்லை. குட்டுண்டாலும் மோதிரக்கையால் குட்டுண்பதில் கௌரவமுண்டு என்று மேலோர் கூறுகின்றனர். ஆகையால் நீ யுன்னிலும் வலியவனால் தாழ்வடைந்தது பற்றி வருந்தலாகாது. அன்றியும் போனதை நினைப்பவன் புத்திகேட்டவனாவான். நான் சொல்வதைக் கொஞ்சங் கேள். அந்தக் குரங்கை நான் அவசியம் பார்க்க வேண்டும்; எப்படியாவது அழைத்துவா" என்றார்.

கருடாழ்வான் "சுவாமி! இவ்வண்ணம் நீர் என்னைப் பரிகசிப்பது ஞாயமல்ல. தான்சாவ மருந்துண்போன் தராதலத்திலில்லை. வீணாயென்னைத் தொந்தரவு செய்யக் கூடாது. ஏழை யென்றால் எவர்க்கும் எளிதுதான். தயவு செய்து என்னை அனுப்பும் விஷயத்தை மட்டும்

---

தரித்திரம்

தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை
சாற்று மெண்ணங்கள்வா ழிடமாம்
தரித்திரம் பற்பல் துக்கமுந் தோன்றத்
தக்கபோாகர மென்ப
தரித்திர நன்மைசா லொழுங்கெனனுந்
தழைவனந் தனக்குழல் தழலாம்
தரித்திரம் கொடிய வெவற்றினுங் கொடிதத்
தகையதை யொழித்த னன்றுமே

"இன்மையின் இன்னாதது யாதெனின், இன்மையே
இன்மையின் இன்னாதது."—தமிழ்வேதம்.

கொடிது கொடிது வறுமை கொடிது. (ஔவை.)

சோம்பலே வறுமைக்கிடம். அதனாலேதான்,—

"சோம்பித்திரியேல்" என்றும் "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்றும் ஔவையார் கூறினர்.

மறந்து விடவேண்டும். சூடேண்டபூனை அடேப்பங்கரை ஏறுது" என்று சொல்லி ஆயாசத்தோடு ஒருபுறம் நின்றனன்.

பகவான், கருடனைக் கண்குளிர நோக்கி "அன்பனே! நீ ஆண்மகனயிருந்தும் இப்படி அதைரியப்படுவது பேடித்தனமாகாதா? எடுத்த காரியத்தை முடிப்பதல்லவோ ஆண்மை. உயிரைத் திரணமாய் நினைத்து நற்காரியத்தி லீடுபடுபவனே யதார்த்த ஊழியன். ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு என்பதை நீ கேட்டதில்லையா? நல்லது-இதுபோகட்டும். இன்னென்று சொல்லுகிறேன் —கேள். எப்போதும் கடுஞ்சொல் வழங்குவது கனியை விட்டுக் காயைத்தின்பதுபோலாகும். எவன் அதைப் பிரயோகிக்க முந்துகிருனே அவனை அது முதலில் வருத்தியே பிறகு வெளிவரும். கடுஞ்சோல்லும் பாம்பும் ஒன்றல்லவா? நீ கடிந்து பேசினதினலன்றே கஷ்டப்பட நேர்ந்தது. ஆகையால் இனி நீ அதை ஒழித்துவிடு. இனிய சொல்லை வழங்குவதிலேயே இன்புற்றிரு. உலகம் இன்சொல்லுக்கே வசப்படும். பிரியவசனனுக்குப் பேயும் இரங்கும் என்பது முதுமொழி. ஆஞ்சநேயன் இராமப்பிரியன்; இராமநாமத்தைச் சொல்லிக் கொண்டிருப்பவனிடம் *குலாமாக நின்று இட்டவேலைகளைத் திட்டமாய்ச் செய்யும் இயல்புடையவன். கருடாழ்வானே! நான் சொன்னது தெரிந்து கொண்டாயா? மனதைத் திடப்படுத்திக்கொள். இராமநாமத்தை இடைவிடாது சொல்லிக்கொண்டுபோ. பிறகு நடக்கிற வேடிக்கையைப் பார். நீயே ஆச்சரியப்படப் போகிருய். எழுங்

* குலாம்—திசைச்சொல்-அடிமை என்பது பொருள்.

திரு-சீக்கிரம்போய்வா. சொன்ன ரகசியத்தை மட்டும் மறந்து போகாதே. இராமர் அழைத்துவரச் சொன்னு ரென்று சொல்லி அழைத்துவா” என்றூர்.

கருடாழ்வான் “இதென்னடா நமக்குப் பொல்லாத காலமாயேற்பட்டது. போய்த்தான் தீரவேண்டும் போலிருக்கிறதே. காலைச்சுற்றின பாம்பு கடிக்காமல் விடுமோ ? என்று யோசித்துப் புறப்பட்டான். அச்சம் ஒருபுறம் இருந்தும் பின் வருகிறபடி பாடிக்கொண்டே வந்தனன்.

### * கீர்த்தனை

பாமருடாநீக் கேலரா மத்து
ராமனை நம்பவுண் டாமே சம்பத்து (பா)

1. ராம பக்தி தனமுநீக் குன்ன
பூமியி லுன்றனக் குக்குறை வென்ன
ஏமிட்டிக்கியோ சிஞ்சது துன்ன
இவனொரு வனேரக்ஷகனடாவுன்ன (பா)

2. காமக்ரோதமுல னெல்லவீடு
காசினியிலப்போ தினக்குண்டோ ஈடு
காமினித்ரௌபதி ஸபாநி ஜூடு
கடைத்தே றும்வழி யிதுவென்றேநாடு (பா)

3. தரணிஸுதர்ஸன தாஸுனிவாக்கு
உறுதியாய் நம்பியுன் ஊழ்வினை போக்கு
பாவசுண்டவை சிந்தலத்ரொக்கு
பஜனை பண்ணி ஆநந்தத்தில் சொக்கு. (பா)

இந்த அமுத வசனத்தைக் கேட்ட ஆஞ்சநேயர்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூ[illegible]
186460
சென்னை-600 008

* இது தெலுங்குந் தமிழுங் கலந்தது-சுதர்சன தாஸரென் பாரொருவர் பாடியது. மனப்பாடத்துக் கினிமையாயிருப்பது கருதி இங்கு நுழைக்கலாயிற்று. பொருள், வேண்டும்போது தக்கவரிடம் தெரிந்துகொள்ளலாம்.

எழுந்துநின்று ஆனந்தக் கூத்தாடத் தலைப்பட்டார். "எல்லாம் ராமமயம். ஜெகம்-எல்லாம் ராமமயம்" என்று தாமும் பாடிக்கொண்டே வந்து கருடாழ்வானைப் பந்து போல் கையில் தூக்கிக்கொண்டு நடனமிடலானார். கருடாழ்வானுக்கோ புலியடிக்குமுன் கிலியடிப்பது போலப் பெரும் பயமுண்டாய்விட்டது. குரங்குகையில் சிக்கிய பூமாலை யுருப்படாது என்ற சத்தியவாக்கு நமக்கே பலித்தது. எது நாம் தப்புவோமென்று புலப்படவில்லை. நமது அகங்காரத்தைப் போக்கவே பகவான் இந்தத் தந்திரஞ் செய்தார். உரலில் தலையிட்டு உலக்கைக்குப் பயந்தால் ஆவதென்ன? நமது மனம் இப்படி கலங்கினாலும் வாய் மாத்திரம் ராமநாமத்தை மறத்தலாகாது. அதில் தான் உண்டு சூக்ஷும் என்று கட்டளை பிறந்திருக்கிறதே" என்று நினைத்து ராமநாமத்தைத் தியானித்துக் கொண்டிருந்தனன். பிறகு மெதுவாய் மாருதியின் காதில் "ஸ்ரீராமர் உம்மை எனது தோளின்மேலேற்றிக்கொண்டு அழைத்துவரச் சொன்னார்" என்றுரைத்தனன்.

"ஸ்ரீராமரா? எங்கிருக்கிறார்? இதோவந்தேன்" என்று அஞ்சனைச் செல்வரும் புறப்பட்டார். இப்போது கருடாழ்வானுக்கு வேறொரு திகில் உண்டாய்விட்டது. கிருஷ்ணமூர்த்திதானே இவரைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினார். ஸ்ரீராமர் அழைப்பதாகப் பொய்பேச நியமித்தாரே. ஸ்ரீராமர் அங்கு இல்லாவிட்டால் நம்பாடு என்னவாமோ தெரியவில்லையே. பகவானே! இச்சமயம் நீர்தானென்னைக் காத்தருளவேண்டும்" என்று சிந்தித்துக்கொண்டே வந்தார்.

ஆஞ்சநேயர் வருவதையறிந்து ஸ்ரீகிருஷ்ணபகவான்,

துவாரகையை அயோத்தியாகவும், தம்மை ஸ்ரீராமராக வும், சகோதரர் முதலானோரை லக்ஷ்மண பரத சத்ருக் னாதியாகவும் மாற்றிக்கொண்டு, ஸத்தியபாமையைக் கூப்பிட்டு "இதோ பார்த்தாயா எங்கள் கோலத்தை? ஆஞ்சநேயன் வருகின்றனன். அவனுக்கு இவ்வண்ணங் காட்சி தராவிடில் நமது பட்டணத்தையே எரித்துவிடு வான். அவன் சாக்ஷாத் ருத்ராம்சம் பெற்றவனல்லவா? ஆகையால் அவன் சேவைக்குவேண்டிய யாவுஞ் சித்த மாய்விட்டன. ஒன்றுதான் பாக்கி. ஸீதை யொருத்தி ஏற்பட்டுவிட்டால் எல்லாஞ் சரியாய் முடிந்துபோம். எனக் கிருக்கும் தேவியருள் நீதான் சிரேஷ்டமானவள் என் பது நீயறிந்த விஷயம். ஆதலால் உடனே நீ ஸீதையாக மாறவேண்டும்" என்றார்.

ஸத்தியபாமை "அதெற்கென்னதடை' இதோவந் தேன்" என்று தனக்குள் 'ஸீதை ஜனகமகாராஜன் புத்திரி. தசரதசக்ரவர்த்தியின் மருமகள். அவளுக்கு உயர்தரமான ஆடைகளிலும் அணிகளிலும் குறைவில்லை. நாமோ யாதவராஜன் புத்திரி. அவ்வளவு சிறப்பு நமக் கெங்கிருந்து வரும். ஆகிலும் பார்ப்போம்" என் றெண்ணி இன்னும் ரம்மியமான சில உடைகளையும் ஆபா ணங்களையும் இரவல் பெற்று "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்" என்பதைக் கவனியாமல் சுமக்கக் கூடாதபடி அலங்கரித்துக்கொண்டு, நிலைக்கண்ணாடியில் பார்த்து "இப்படித்தான் இருப்பாள் ஸீதை" என்று சந் தோஷித்து, பகவானுடைய ஸந்நிதானத்துக்கு வந்தாள்.


பகவான் எல்லோரையும் நோக்கி "இதோ ஸீதா தேவி வருகிறாள்" பாருங்கள். நடக்கமுடியாதபடி நொண்

டிநொண்டி நடந்து வருகிறாள். அளவு கடந்த நகைகளையும் உடைகளையும் தாங்கமுடியாமையால் இயற்கை நடை பறந்து போய்விட்டது. இந்த நடையுடன் இவள் எப்படி ஸ்ரீராமரோடு காடு மலை முதலிய கடினப்ரதேசங்களைக் கடந்து சென்றாளோ தெரியவில்லை. ஒருகால் ஸ்ரீராமரே ஸீதையைத் தூக்கிச் சென்றிருப்பாரோ? அப்படியானால் இப்போது நான் இவளைச் சுமந்துகொண்டுதான் வீற்றிருக்கவேண்டும். அது என்னால் முடியாத காரியமாகத் தோன்றுகிறதே" என்று நகைத்தார்.

பகவான் இப்படிப் பேசியது சத்தியபாமைக்கு வெட்கத்தையும் அவமானத்தையும் உண்டுபண்ணியபடியால் அவள் அருவருப்படைந்து வந்தவழியே திரும்பிவிட முயன்றாள். உடனே பகவான் ருக்மிணி தேவியை வரவழைத்து "நொடிப்போதில் நீ ஸீதையாக அலங்கரித்துக்கொண்டு வரவேண்டும்" என்று உத்தரவிட்டார். ருக்மிணி டம்பாகாரமில்லாத சுத்தமான ஆடையுடனும் அத்தியாவசியமான சில அணிகலனுடனும் ஸீதையைப் போல் தன்னை அலங்கரித்துக்கொண்டு இரண்டொரு நிமிஷத்தில் வந்து சேர்ந்தாள். இந்த வடிவத்தைப் பகவான் ஸத்தியபாமைக்குக் காட்டி "உனக்கு இந்தத் திராணியில்லையே. வீண் டம்பமட்டும் பேசுகிறாயே" என்று பரிகசித்தார்.

இவ்வாறு பகவான் பலராமர், கருடாழ்வான், ஸத்தியபாமை என்னும் மூவரின் அகங்காரத்தையும் ஒழித்து ஆஞ்சநேயருக்கு ஸ்ரீராமசேவையைக் காட்டி அவரை ரமிக்கச் செய்து, துவாரகை முதலிய யாவும் பழையபடியிருக்கச்செய்தார். ஆஞ்சநேயர் "இதுவென்ன அதிசயம்" என்று திகைத்தார்.

பகவான் "ஆஞ்சநேயரே! நாம் இராமாவதார முடி



கருடகர்வபங்கம்—ஸத்தியபாமைகர்வபங்கம்

வில் நம்முடைய அடிச்சோதிக்கு எழுந்தருளும்போது உமக்குக் கிருஷ்ணவதாரத்தில் ஸ்ரீராம காட்சியை யளிப்போம்'' என்று வாக்குதானம் செய்தபடி இப்போது உம்மைச் சேதுவிலிருந்து இங்கு வரவழைத்து அக்காட்சியைக் கொடுத்தோம்: இனி நீர் எப்போதும் போல உமது ஸ்தானத்திற்குப் போய் யோகசமாதியுற்று நிரதிசய இன்பத்தை அனுபவித்து வரக்கடவீர்'' என்று ஆசீர்வதித்து அனுப்பினர். பிள்ளைகளே! இந்தக்கதையால் அகங்காரம் கொடியதென்றும், அதைக்கொண்டவர்கள் அவமதிப்பையே அடைவார்கள் என்றும், அதனுல் அதை ஒருவரும் இச்சிக்கக் கூடாதென்றும் நீங்கள் தெரிந்துகொண்டு "மேழோராயினுந் தாழவுரை'' என்கிற நீதியைக் கடைப்பிடித்து எல்லோரிடத்தும் பணிவுடன் ஒழுகிவரவேண்டும்; அப்போதுதான் உயர்ந்த நிலையையடைந்து சுகம் பெறுவீர்கள். சுபம். சுபம்.

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை.

---

## சாகாதவர் யாவர்?

அனைவர்க்கு முபகாரமாம் வாவி கூவமுண்
டாக்கினோர் நீதிமன்னர்
அழியாத தேவாலயங்கட்டி வைத்துளோர்
அகரங்கள் செய்த பெரியோர்
தனையொப்பிலாப் புதல்வன் றனைப் பெற்றபேர்
சமர்வென்ற சுத்தவீரர்
தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாறாத
தருமங்கள் செய்த பேர்கள்
சனவித்தை கொண்டவர்க ளோயாத
கொடையாளர் காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுத்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்களிம்
மனிதர்கள் சரீரங்கள் போகினும் சாகாத
மனிதரிவ ராகு மன்றோ
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (குமரேச சதகம்.)

## நான்கண்ட புதுமை

### ஹாஸ்யம்.

ஓர் இடத்தில் அப்புச்சாமி, குப்புச்சாமி, சுப்புச்சாமி என்ற மூவரும் ஒரு கல்யாண விஷயமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பு:—ஏண்டா அவஸ்தைப்படுகிறாய்? நமது குழந்தை கஜவல்லியை ஐராவதத்திற்குக் கொடுத்துவிட லாமே.

குப்பு:—ஆமாம், மறந்தே போய்விட்டேன், வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுதவனைப் போலானேன்; பையன், நல்ல புத்திசாலி, யோக்கியன்; எம் ஏ பாஸ் செய்திருக்கிறான். நல்ல உத்தியோகத்திலு மிருக்கிறான்.

சுப்பு:—எல்லாம் சரிதான். அவன் கிடைத்தால் நமது குழந்தையும் அதிர்ஷடசாலிதான்; வரதக்ஷிணை கொடுக்கவேண்டியிருக்குமே! ஈசுவரனுடைய சம்மதம் பெறவேண்டியிருக்குமே! இவைகளைப்பற்றி என்ன யோசனை?

அப்பு:—வரதக்ஷிணை சமாசாரம் இவ்விடம் பேசப் படாது. கொடுக்கல்வாங்கல் இரண்டும் தள்ளுபடிதான்.

குப்பு:—கொடுக்கல் வாங்கல் இல்லாமல் கல்யாணம் எப்படி நடக்கும்? நாம் கொடுக்கவேண்டியதுதான். அவர்கள் கன்னிகாதானம் வாங்கவேண்டியதுதான். பிரபஞ்சமே கொடுக்கல் வாங்கலில்தானே அடங்கியிருக்கிறது.

அப்பு:—நான் என்னவோ வரதக்ஷிணை கொடுக்கல் வாங்கல் உதவாதென்று தான் சொன்னேன்.

குப்பு:—கஜவல்லிக்குத் தகுந்த புருஷன் ஐராவதமே. ஐராவதம் நல்ல பகுத்தறிவுள்ளவன். நமது பால விநோதினி பத்திராதிபர் வரகவி திரு. சுப்ரமண்ய பாரதியார் வரதக்ஷிணை வாங்குவதும், கொடுப்பதும் கெட்ட வழக்கம் என்பதைப்பற்றி விளக்கியுள்ள 'ஸ்நேகலதா' என்னும் புத்தகத்தைப் படித்தது முதற்கொண்டு தானும் வரதக்ஷிணை வாங்குவதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறனும். நாம் பிரயத்தனம் செய்தால் முடிந்துவிடும்.

சுப்பு:—ஸ்நேகலதா, ஹேமலதா ஒனறும் ஈசுவரனிடம் பலிக்காது. ஈசுவரனுடைய சம்மதமில்லாவிடில் காரியம் கைகூடாது. பையன் என்ன தீர்மானம் செய்திருந்த போதிலும் ஈசுவரனுடைய மனசு கோணும்படி நடக்கமாட்டான். ஈசுவரனிடம் விசேஷ அன்புடையவன்.

அப்பு:—அதெல்லாம் ஏதப்பா இந்தக் காலத்தில், அதுவும் இங்கிலீஷ் படித்தபிள்ளை.

சுப்பு:—நீங்கள் விஷயம் தெரியாமற் பேசுகிறீர்கள். என்ன இங்கிலீஷ் படித்திருந்தபோதிலும், யார் என்ன சொன்னபோதிலும் ஈசுவரனுடைய சம்மதமில்லாமல் பையன் ஒருகாரியமும் செய்யமாட்டான்.

குப்பு:—என்னடா, ஈசுவரன் பலே ஈசுவரன். பையனுடைய கொள்கை மாறிவிட்டபொழுது ஈசுவரன் தானென்ன செய்யமுடியும்? பார்வதிதான் என்னசெய்ய

முடியும்? பையன் மேஜர்! அதிலேயும் எம். ஏ. நல்ல உத்தியோகத்திலிருக்கிறான். இந்த நிலையில் ஈசுவரன் எம்மாத்திரம்! நான் முடித்துவைக்கிறேன் காரியத்தை! ஈசுவரன் கூடுமானால் தன்னாலானதைச் செய்து கல்யாணத்தைத் தடுக்கட்டும் பார்க்கலாம்.

சுப்பு:—நீ ஈசுவரனுடைய சம்மதமில்லாமல் இந்தக் காரியத்தை முடித்துவிட்டால் நான் ஒரு பக்கத்து மீசையைச் சிறைத்து எரிந்து விடுகிறேன்—என்றான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வழியே போய்க்கொண்டிருந்த நான் இவர்கள் பேசுவதைச் சற்றுக்கவனித்தேன். இவர்கள் பேசுவது விபரீதமாக விருந்தது. ஈசுர சம்மதமில்லாமல் எந்தக்காரியம் நடைபெறும். இன்னும் சற்றுக் கவனிக்கலாமென்று இருந்தேன். அப்போது,

குப்பு:—ஏண்டா துள்ளுகிறாய். உனக்குத்தான் ஈசுவரனைத் தெரியுமாக்கும். ஈசுவரனுக்கும் உனக்கும் இரண்டு விரல்கடைமாதிரி பேசுகிறாய். ஈசுவரன் எம்மாத்திரம்? அவனால் என்னடா ஆகும்? நான் அந்தக் காரியத்தை முடிக்காவிட்டால் என் பெயரை மாற்றி யழை.

இப்படி இவர்கள் பேசப்பேச இவர்களுள் சண்டை பலத்துவிட்டது.

சண்டை பலக்கவே நாம் அங்கிருப்பது கூடாதென்று யோசித்தேன். இருந்தாலும் இவ்வளவு நேரம் காலத்தைப் போக்கியும் விஷயம் தெரிய வில்லையே. ஈசுவரனால் ஆகாதகாரியத்தை இவர்கள் எப்படி சாதிக்க முடியும். இவர்கள் பேசுவது விபரீதமாயிருக்கிறதே. எல்லாம் 'எனையாளும் ஈசன் செயல்' என்பதை விடுத்து இவர்கள் மனம் போனபடி பேசுகிறார்களே. இவர்கள்

என்ன நிரீசுவரவாதிகளா? இதை யறியவேண்டு மென்று நினைத்து அவர்களுக் கெதிரே தோன்றி "என் இப்படி சண்டை போடுகிறீர்கள் ? ஈசுவரனுடைய சம்மதமில் லாமல் என்ன காரியம் தான் கைகூடும். நீங்கள் ஆஸ்திகர் கள் தானே ?—என்றேன்.

கும்பு:—நீ பலே ஈசுவரனைக் கண்டுவிட்டாயாக்கும். நீ யார் கேட்பதற்கு—என்றான்.

அப்பு:—அடே, அடே, இவள் நமது பாலவிநோ தினியடா, இவள் தமிழ்நாட்டுக்கு நன்மை செய்பவள். இவளுக்கு விளங்கச் சொல்லவேண்டும்" என்று சொல்லி என்னைப்பார்த்து 'அம்மா, பால விநோதினி, ஈசுவர னென்றால் சர்வேசுவரனல்ல. கல்யாணப் பையனுடைய பாட்டன் பெயர் ஈசுவரன். அதனால் அப்படிப் பேசிக் கொண்டிருந்தோம்" என்றான்.

நான் "நீங்கள் கல்யாணம் நிச்சயம் செய்வது நன்றா யிருக்கிறது. ஈசுவரனை நிரீசுவரனுக்கிவிட்டீர்களே சற்று நேரத்திற்குள்" என்றுசொல்லி அவ்விடம் விட்டகன்று நான்கண்ட இப்புதுமையை இப்போது உங்களுக்கு எடுத்துரைத்தேன்.

பாலவிநோதினி.

---

பாளைவாய்க் கமுகில் வந்தூர் என்ற
காவடிச்சிந்து மெட்டு.

## சுப்பிரமணியர் துதி.

முருகவென்ன வெண்ணியெண்ணி யுருகிகின்ற தென்மனமே
மூதறிவுற் றோர்கள்போற்றும் முன்னவா—என்றன்
தீதகற்றி டென்றுன்றன்முன் பன்னவா.

பெருகுகாத லாகிவந்து னருகில்மேவி நான்பணிந்து
பேசும்வரம் யாசிக்கிறே னீசனே—என்ன
யோசனைபிர யாசம்வள்ளி நேசனே:

நித்தநித்த முன்னருளை நத்திமிக வேண்டுகிறேன்
நேயமாயன் பர்க்குதவும் நேயமே—யிந்தக்
காயநிச மன்றேயென்றும் மாயுமே.

சுத்தஞான ரூபமாகும் கர்த்தாவென்னைக் கைவிடில் நீ
சித்தசமா தானமென்று மில்லையே—மற்றுஞ்
செத்திடுநாள் சேருமட்டுந் தொல்லையே.

போதுமிப்புன் ஜென்மமென்றே நாதவோலம் போடுறேனே
போகாதோவிச் சொல்லுனது காதிலே—மிக
வேகுமேம னம்நீசெய்யும் வாதிலே.

தீதுபோக்கி யென்னையாண்டு சேதமின்றி வைத்திடவே
திருவுளத்தி லின்றுகிருபை கூருமே—இன்னுங்
கருவிலேசேர்த் திடாதென்னைப் பாருமே.

மணமதனில் வேட்கைகொண்டு குணமாய்வள்ளி கைபிடித்த
மங்களக்கு ணம்மிகுந்த வேலனே—உயர்
இங்கிதம் குத்திடுநற் சீலனே.

கணபதிசுப்பிரமணியன் முப்பொழுதுங் கைதொழுதேன்
கடவுளேக ருத்தனேக டாக்ஷியே—யென்றும்
மடமையைய கற்றுதந்து [illegible]யே.

செ. ரா. கண[illegible] [illegible]மண்ய அய்யர்,
தமிழ்ப் பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

18646
600 003

# AYURVEDIC
# EYE TREATMENT

OF

## Mr. T. S. AMIRTHALINGAM PILLAI
## OF TANJORE NOW IN MADRAS.

---

# கண் வைத்தியம்

---

எமது நண்பர்களில் பலர் எமது வைத்தியசாலையில் கண் வைத்தியமும் நடத்தினால் அநுகூலமாயிருக்குமென்று கேட்டுக்கொண்டதின் பேரில், ஆயுர்வேத கண் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுணர்ந்தவரும், தஞ்சாவூர் சமஸ்தான அரண்மனை கண்வைத்தியரும், மெடல் பெற்றவரும், கண் வைத்தியத்தில் ஸ்பெஷலிஸ்டுமாகிய Mr. T. S. அமிர்தலிங்கம் பிள்ளையை வரவழைத்திருக்கிறோம். கண்ணிலுண்டாகும் கர்ட்டராக்ட் (Cataract) கண்ணோய், அமரம், பில்லம், அன்னகோபம் முதலிய சாஸ்திர சம்பந்தமான வியாதிகளையும், அடிபட்ட கண்கள், குந்தம் தள்ளிய கண்கள், பூவிழுந்த கண்கள் இன்னும் அநேகவிதமான கண் வியாதிகளையும், எரிச்சல், உறுத்தல் முதலிய கொடுமையில்லாத உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு, ஆப்பரேஷன் இல்லாமல் சௌக்கியப்படுத்தப்படும். ஏழைகளுக்கு இலவசமாய் வைத்தியம் செய்யப்படும்.

நோயாளிகளை காலை 7-மணி முதல் 9-மணி வரையிலும் மாலை 4-மணி முதல் 6-மணி வரையிலும் கவனிக்கப்படும்.

டாக்டர் வி. ஆர். சுநதரம்,
"ஆயுர்வேத வைத்திய மந்திரம்"
பைகிராப்ட்ஸ் ரோட்,
இராயப் பேட்டை, சென்னை.

Rmc 256/13

வெளியாய் விட்டது! மூன்றம் பதிப்பு!!

# சுப்ரமணியர்
# தோத்திரக் கொத்து



ஆண்டவன் திருவுருவப்படத்துடன் கூடியது.
துதிசெய்வதற்கேற்ற அருமையான பாடல்கள்.
இப்பதிப்பில் கிரகமணிமாலையும் புதிதாய் சேர்த்திருக்கிறது
விலை அணா நான்கு.

விலாசம் :—மானேஜர், பாலவிநோதினி ஆபீசு,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.